

# 14. தகனச்சாலையை முன்பதிவு செய்தல் - செயல்வழிப் படம்




முன்ன
ைய
சடலத்தை தகனம் செய்தது பற்றி விண்ணப்பதாரியின் சான்றிகமைப் பெறல்
பொறுப்பு: தகனச்
விண்ணப்பதாரிக்கு விடயங்களை தெளிவுபடுத்தி உறவினர்களின் விருப்பப் படி சடலத்தை அடக்கம்
பொறுப்பு: தகனச் செயற்பாட்டில்
தகனம் செய்யப்பட்டதாக விடயப் பொறுப்பு
பொறுப்பு: தகனச்
தகனம் செய்ய முடியாமல் போனது பற்றி விடயப்
பொறுப்பு: தகனச் செயற்பாட்டில்
அஸ்தியின் எச்சங்களை
இல்
அஸ்தியைப் புதைத்தல்
பொறுப்பு: தகனச் செயற்பாட்டில்
ஆ
அடக்கம் செய்வதற்கான செலவைக் கழித்து, மீதமுள்ள தொகையை
பொறுப்பு: விடயப் பொறுப்பு
அஸ்தியைக் கையளித்து
பொறுப்பு: தகனச் செயற்பாட்டில்
வைப்புக் கணக்கை
பொறுப்பு: விடயப் பொறுப்பு


කාර්යසාධක
දර්ශකය

# 14. தகனச்சாலையை முன்பதிவு செய்தல்

**01. அறிமுகம்**

(அ) ஏதேனுமொரு உள்ளூராட்சி மன்ற அதிகார எல்லையினுள் வசிக்கும் ஒருவர் இறந்தால், அந்த உடலை அடக்கம் செய்ய அல்லது தகனம் செய்வதற்காக பொது மயானம் அமைக்கும் பணிக்காக காணி வழங்குதல் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் கடமை என சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கைக் குடிமக்களிடையே ஒரு சில இனப் பிரிவினர் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு முற்படுகின்றார்கள். இந்த மக்களின் இந்த சடங்குகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக அவசியப்படும் வசதி வாய்ப்புக்களை வழங்குதல்.

(இ) பொதுப் பயன்பாட்டுச் சேவையாக உடல்களை அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்வதற்கு அவசியப்படும் வசதி வாய்ப்புக்களை வழங்கும் செயற்பாட்டினை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஈ) இறந்தவர்களின் உடல்களைப் புதைக்க கட்டப்படும் நினைவுச் சின்னங்களினால் உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் நிலப் பகுதியின் அளவு படிப்படியாக குறைகின்றது மற்றும் மரபுவழி முறையில் மரங்களைப் பயன்படுத்தி இறந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு ஏற்கப்படும் செலவுகள் போன்ற காரணங்களால் அநேகமான உள்ளூராட்சி மன்றங்களில் தகனச்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**02. சட்ட அதிகாரம்**

(அ) மாநகர சபை மற்றும் நகர சபைகள் தொடர்பிலான, 231 ஆம் அதிகாரமான மயானங்கள் மற்றும் அடக்கம் செய்தல் தொடர்பான கட்டளைச் சட்டமும், பிரதேச சபை தொடர்பிலான, 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் 127 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய, 231 ஆம் அதிகாரமான மயானங்கள் மற்றும் அடக்கம் செய்தல் கட்டளைச்சட்டம்.

(ஆ) உள்ளூராட்சி அதிகாரசபையால் உருவாக்கப்பட்ட தகனச்சாலை இடைக்காலச் சட்டங்கள் இருந்தால், அந்த இடைக்காலச் சட்டங்களின் விதிமுறைகளும் ஏற்புடையதாகும்.

(இ) இறந்த சடலங்களை தகனம் செய்வது தொடர்பான குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை.

**03 தகைமைகள்**

(அ) திடீர் விபத்து அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் இறந்த ஒருவரின் சடலம் தொடர்பாக நடாத்தப்படும் விசாரணையின் போது, சம்பந்தப்பட்ட இறந்த உடல் தகனம் செய்வதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்படாத அல்லது இயற்கையாக மரணம் ஏய்திய ஒருவரின் சடலமாக இருக்க வேண்டும்.

(ஆ) உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசத்தினுள் வாழ்ந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

(இ) உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வசிக்கும் ஒருவரின் சடலத்தைப் பொறுத்தவரை, உள்ளூராட்சி நிறுவனத்தினால் நிர்ணயித்த மேலதிக

கட்டணத்தை அறவிட்டதன் பின்னரே அவ்வாறான சடலங்களை தகனம் செய்வதற்கான வாய்ப்பளிக்கப்படும்.

## 04. கட்டணம்

சபையினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். (இணைப்பு 01)

## 05. சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

(அ) இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள இணைப்பு 02 இன் படி சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணபப்பபடிவம்.

(ஆ) இறந்தவரின் மரணச் சான்றிதழ். ( வெளிநாட்டில் மரணித்த நபர் தொடர்பாக, அந்த நாட்டினால் வழங்கப்பட்டுள்ள மரணச் சான்றிதழ் - ஆங்கில மொழி அல்லாது பிற மொழிகளில் அச்சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பின், அதன் ஆங்கில மொழிபெயர்ப்புடன்)

(இ) மரணித்தவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி (இருப்பின்)

(ஈ) விண்ணபப்தாரியின் தேசிய அடையாள அட்டையின் பிரதி. (பரீட்சித்துப் பார்ப்பதற்கு மூலப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்)

## 06. நடைமுறை ஒழுங்கு

| ஒழுங்கு | கால வரையறை | அதிகாரம் |
|---|---|---|
| சபையின் இணையதளத்திலோ அல்லது முன்னரங்க அலுவலகத்திலோ உள்ள தகனச்சாலை காத்திருப்புப் பட்டியலின்படி, தகனச்சாலையில் வசதியுள்ள திகதி மற்றும் நேரத்தை அறிந்து, விண்ணபப்பபடிவத்தை பூர்த்தி செய்து குறித்த இணைப்புடன் முன்னரங்க அலுவலகத்தில் ஒப்படைத்தல் | | விண்ணபப்தாரி |
| குறித்த கட்டணத்துடன் விண்ணபத்தைப் பெற்று, தகனத்திற்கான அனுமதிப்பத்திரத்தின் பிரதியையும் பற்றுச்சீட்டையும் விண்ணபப்தாரியும், மற்றைய பிரதியை தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவருக்கும் அனுப்பி அவருக்கு தெரியப்படுத்தல். | விண்ணபப்பபடிவத்தை பெற்றுக் கொண்டவுடன் | முன்னரங்க அலுவலக உத்தியோகத்தர் |
| தகனத்திற்காக பொறுப்பேற்ற சடலங்கள் பற்றிய பதிவேட்டில் தரவுகளை உள்ளீடு செய்தல் | அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டவுடன் | முன்னரங்க அலுவலக உத்தியோகத்தர் |

| ஒழுங்கு | கால வரையறை | அதிகாரம் |
|---|---|---|
| அனுமதிப் பத்திரங்களுடன் கூடிய சடலங்களை எடுத்துவந்து தகனம் செய்வதற்கு தகனச்சாலைப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் | ஒதுக்கப்பட்ட தினத்தில் உரிய நேரத்திற்கு முன் | விண்ணப்பதாரி |
| சடலத்தைப் பொறுப்பேற்று தகனம் செய்து, அது பற்றி விண்ணப்பதாரியைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் | சடலத்தைப் பொறுப்பேற்றதன் பின்னர் | தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் |
| தகனம் செய்யப்பட்ட சடலங்கள் தொடர்பான பதிவேட்டில் தரவுகளைப் பதிவிடல் | சடலம் தகனம் செய்யப்பட்டு முடிவுற்றவுடன் | தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் |
| சடலம் தகனம் செய்யப்பட்டதாக விடயப் பொறுப்பு உத்தியோகத்தரிடம் அறிக்கையிடல் | சடலத்தை தகனம் செய்த பின்னர் | தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் |
| வைப்புக் கணக்கில் வரவு வைத்து பண வருவாய் தலைப்புக்கு மாற்றி வைப்புக் கணக்கை ஈடுசெய்தல் | தகனச்சாலை செயற்பாட்டாளரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் | விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் |
| இறந்தவரின் அஸ்தியை கோரியிருந்தால், அவற்றை எடுத்து வைத்தல் | சடலத்தை தகனம் செய்த பின்னர் | தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் |
| கோரிக்கையாளருக்கு அஸ்தியை வழங்கி உறுதிப்படுத்திக் கொள்ளல் | தகனம் செய்யப்பட்ட நாள் முதல் ஏழு நாட்களினுள் | தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் |

குறிப்பு : 1. தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணத்தை முதல் வைப்பாக பெற்றுக்கொள்ளலும், சடலத்தை தகனம் செய்து நிறைவு பெற்றதன் பின்னர் குறித்த தொகையை வருமானத் தலைப்பில் வரவு வைப்பதற்கும் அல்லது தகனம் செய்வதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் அடக்கம் செய்வதற்குரிய செலவை அறவிட்டு மீதியை விண்ணப்பதாரிக்கு வழங்கி வைப்புக் கணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. விடுமுறை தினங்களில் மற்றும் அலுவலக நேரத்தின் பின்னர் தகனச்சாலையை முன்பதிவு செய்வதற்கு உத்தியோகத்தர் ஒருவரை பணியிலமர்த்தல் மற்றும் கடமைகளை ஆற்றுவதற்கு வேலைத்திட்டங்களை ஏற்படுத்தி வைப்பது சபையின் பொறுப்பாகக் காணப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மேற்படி நடைமுறையில் 'முன்னரங்க அலுவலக உத்தியோகத்தர்' என்பதற்கு, அவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் உள்ளடங்குவார்.

3. தகனச்சாலையின் செயற்பாடுகள் வழமை போல் இடம்பெறுகின்றா என்பது பற்றி தொடர்ச்சியாக சோதனையிட்டுப் பார்ப்பதும், அவசிப்படும் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பழுதுபார்ப்புச் செயற்பாடுகளை உரிய காலத்தில் மேற்கொள்வதும் சபையின் பொறுப்பாகும்.

4. இதன்போது "மரணச் சான்றிதழ்" என்பதனை எவ்வகையான சான்றிதழ் என்பதனை அறிந்து கொள்வதற்காக இணைப்பு 02 இல் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் 4 ஆம் பந்தியைப் பார்க்கவும்.

5. சடலத்தை தகனம் செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தினை மூன்று பிரதிகளாக தயாரித்துக் கொள்ள வேண்டும் என்பதோடு அதன் மூலப் பிரதியை விண்ணப்பதாரிக்கும் இரண்டாம் பிரதியை தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவருக்கும் மற்றும் மூன்றாம் பிரதியை அப்பதிவேட்டிலே வைத்திருத்தல் வேண்டும்.

6. தகனம் செய்வதற்காக பொறுப்பேற்ற சடங்கள் தொடர்பிலான பதிவேடு மற்றும் தகனம் செய்யப்பட்ட சடலங்கள் தொடர்பிலான பதிவேட்டினை ஒழுங்குமுறையே இணைப்பு 4 இன் மாதிரிக்கு ஏற்ப தயாரித்திருக்க வேண்டும்.

07. கட்டுப்பாட்டை மீறிய செயற்பாடொன்றின் காரணமாக சடலத்தை தகனம் செய்ய முடியாதவிடத்து அதற்குரிய ஒழுங்கு

| **ஒழுங்கு** | **கால வரையறை** | **அதிகாரம்** |
|---|---|---|
| விண்ணப்பதாரிக்கு அறிவித்து சபைக்குச் சொந்தமான மற்றொரு தகனச்சாலை இருப்பின் அதில் தகனம் செய்தல் அல்லது விண்ணப்பதாரியின் ( உறவினர்களின்) விருப்பப்படி சபைக்குச் சொந்தமான மயானத்தில் அடக்கம் செய்தல். | அத்தினமே | அதிகாரமளிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு உத்தியோகத்தரின் இணக்கப்பாட்டுடன் தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் |
| தகனம் செய்ய முடியாமல் போனது பற்றி அலுவலகத்திற்கு அறிக்கையிடல் | அத்தினமே | தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் |
| அடக்கம் செய்வதற்கான செலவைக் கழித்து, மீதமுள்ள தொகையை விண்ணப்பதாரருக்கு விடுவித்தல் | அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் | விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் |
| அறவிட்ட தொகையை கணக்கிலிடுதல் | கொடுப்பனவை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலே | விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் |

## 08. இணைப்பு

இணைப்பு

தகனச் செயற்பாட்டுச் சேவைக்காக அறவிடல்

(அ) அதிகாரப் பிரதேசத்தினுள் வசித்த முதியோர் ஒருவரின் சடலம் ரூபா.. . . . . . . . . . . .

(ஆ) அதிகாரப் பிரதேசத்தினுள் வசித்த இளம்வயது ஒருவரின் சடலம் ரூபா.. . . . . . . . . . . .

(இ) அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வசித்த முதியோர் ஒருவரின் சடலம் ரூபா.. . . . . . . . . . . .

(ஈ) அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வசித்த இளம்வயது ஒருவரின் சடலம் ரூபா.. . . . . . . . . . . .

குறிப்பு : 1. இளம்வயதினர் என்பது 12 வயதுக்குக் குறைவான ஒருவராகும்.

2. இந்தக் கட்டணத்திற்கு உரித்தாக பிற வரிகள் அல்லது கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது.

**இணைப்பு 02**

**. . . . . . . . . . . . . . . . . சபை**

**சடலமொன்றை தகனம் செய்வதற்கான அனுமதி கோரல்.**

**(படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் இங்கு இறுதியில் உள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து புரிந்து கொள்ளவும்)**

01. விண்ணப்பாதிரியின் -

(i) முழுப் பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(ii) முகவரி: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(iii) கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம் (இருப்பின்): . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(v) தொலைபேசி இலக்கம்: (கையடக்க) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (வீடு) . . . . . . . . . . . . . . .

02. இறந்தவரின்-

(i) முழுப் பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(ii) பால் (ஆண்/ பெண்): . . . . . . . . . . . . . .

(iii) பிறந்த திகதி: . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(iv) வசிப்பிடத்தின் முகவரி: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(v) அவ்விடம் உரித்தாகும் கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(vi) தேசிய அடையாள அட்டை இலக்கம் (இருப்பின்): . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

03. மரணித்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான உறவு முறை: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

04. இறந்தவரின் மரணச் சான்றிதழின் பதிவிலக்கம் மற்றும் திகதி: . . . . . . . . . . . . . . . . . . . . . . .. . . . . (மரணச் சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும்.) ( பரீட்சித்துப் பார்ப்பதற்கு மூலப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்)

05. மரணத்திற்கான காரணம்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(மரணச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு)

06. மரணம் தொடர்பாக அவசர பிரேதப் பரிசோதனை இடம்பெற்றதாயின் -

i. பரீட்சித்த உத்தியோகத்தரின் பெயரும் பதவியும்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

ii. பிரேதப் பரிசோதனை இடம்பெற்ற திகதி: . . . . . . . . . . . . . . . . . . . . . .

iii. பரிசோதனை உத்தியோகத்தரின் முடிவு: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

iv. பரிசோதனையின் படி சடலத்தை தகனம் செய்வதைத் தடுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா?: ஆம்/இல்லை

07. சடலத்தை தகனம் செய்வதற்கு எதிர்பார்க்கும் தகனச்சாலை : . . . . . . . . . . . . . . . . . . . .

08. அஸ்தியின் எச்சங்களை பெற்றுக்கொள்ள நாடுகின்றீர்களா?: ஆம்* / இல்லை*

09. பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதியளிக்கிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பிலான முழுப் பொறுப்பினையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும், இந்த விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள . . . . . . . . . . சபையினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகள் அனைத்தையும் நான் ஏற்றுக்கொள்வதாகவும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றுவதாகவும் அறியத்தருகிறேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்ணப்பதாரியின் கையொப்பம்

(அலுவலக உபயோகத்திற்காக)

பணம் அறவிடல் மற்றும் தகனசாலையை முன்பதிவு செய்வது தொடர்பான தகவல்கள் :

அ. மரணித்தவரின் வசிப்பிடம் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ளதா?: - ஆம் / இல்லை *

ஆ. மரணத்தவர் வயோதிபர் ஒருவரா இல்லையா என்பது பற்றி?: - முதியவர் / இளம்வயதினர்

இ. அறவிடப்பட்ட கட்டணம்: - ரூபா. . . . . . . . . . . . . . . .

ஈ. பெறுகை சீட்டிலக்கம்: . . . . . . . . . . . . . . . . . . . . - திகதி: 20 . . . . . . . . . . . . . . . .

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முன்னரங்க அலுவலக உத்தியோகத்தர்

- - - - - - - - - - - - - - (இவ்விடத்தினால் வேறுபடுத்தி இங்கு கீழேயுள்ள கட்டளைகளை தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவருக்கு வழங்கவும் ) - - - - - - - - - - - - - - -

தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவருக்கான பிரதி

. . . . . . . . . . . . . . . . . . . . **சபை**

தகனச்சாலைப் பொறுப்பாளர், **அனுமதிப் பத்திர இலக்கம்: . . . . . . .**

. . . . . . . . . . . . . . . . . . . . தகனச்சாலை.

**சடலமொன்றை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரம்.**

தேசிய அடையாள அட்டை இலக்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இனையுடைய . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . திரு /திருமதி /செல்வி இனால் 20 . . . . . . . . . . . . . . . ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் தகவல்களை கருத்திற் கொண்டு, 20 . . . . . . . . . . . . . . . ஆந் திகதி மரணித்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இனையுடைய . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . திரு / திருமதி / செல்வியின் பூதவுடல், 20 . . . . . . . . . . . ஆந் திகதி, முற்பகல் /பிற்பகல்* . . . . . . . . . இற்கு, . . . . . . . . . . . . . . . . . . . . . . தகனச்சாலையில் தகனம் செய்வதற்கு பொறுப்பேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

02. இந்த சடலத்தின் தகனக் கட்டணமாக ரூபா. . . . . . . . . . . வினை அறவிட்டு 20 . . . . . . . . ஆந் திகதி இலக்கம் . . . . . இனையுடைய பெறுகை சீட்டு வழங்கப்பட்டு, தகனம் செய்வதற்கு பொறுப்பேற்ற சடலம் தொடர்பான பதிவேட்டின் தொடரிலக்கம் . . . . . . இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

03. இந்த அனுமதிப்பத்திரத்தில் மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரியினால் கொண்டு வரப்படும் சடலம், மேற்படி முதற் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் உரிய நேரத்தில் தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும். மேலும், இந்த அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலின் படி தங்களால் பராமரித்து வரும், தகனம் செய்யப்பட்ட பூதவுடல் தொடர்பான பதிவேட்டில் குறித்துக் கொள்ளவும்.

04. சடலத்தை தகனம் செய்த பின்னர் அஸ்தியின் எச்சங்கள் விண்ணப்பதாரியினால் கோரப்பட்டுள்ளது. / கோரவில்லை. *

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முன்னரங்க அலுவலக உத்தியோகத்தர்
மாநகர ஆணையாளர் / தலைவருக்குப் பதிலாக
(உத்தியோகபூர்வ பதவி முத்திரையிடவும்)

***தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்.**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

தகனச்சாலைப் பொறுப்பாளர்,

மேற்படி அனுமதிப் பத்திரத்திற்கு ஏற்ப தகனம் செய்யப்பட்ட பூதவுடலின் அஸ்தியைப் பெற்றுக்கொண்டேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்ணப்

கையொப்பம்

QR Code

- - - - - - - - - - - - - - - - - - - **(இப்பகுதியை நிரப்பி இவ்விடத்திலிருந்து வேறாக்கு அலுவலகத்திற்கு ஒ** - - - - - - - - - - - - - - -

விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்,

மேற்படி அனுமதிப் பத்திரத்திற்கு ஏற்ப தகனம் செய்யப்பட்டதாக / தகனம் செய்ய முடியாமற் போனது என்பது பற்றி அறிக்கையிடுகிறேன்.

திகதி: 20 . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

தகனச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்

- - - - - - - - - - - - - - - (இவ்விடத்தினால் வேறுபடுத்தி இங்கு கீழேயுள்ள கட்டளையின் பிரதியை விண்ணப்பதாரிக்கு வழங்கவும் ) - - - - - - - - - - - - - -

விண்ணப்பதாரிக்கு ஒரு

இணைப்பு

**. . . . . . . . . . . . . . . . . . . . சபை**

தகனச்சாலைப் பொறுப்பாளர், **அனுமதிப் பத்திர இலக்கம்: . . . . . . .**

. . . . . . . . . . . . . . . . . . . . . தகனச்சாலை.

**சடலமொன்றை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரம்.**

தேசிய அடையாள அட்டை இலக்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இனையுடைய . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . திரு /திருமதி /செல்வி இனால் 20 . . . . . . . . . . . . . . . ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் தகவல்களை கருத்திற் கொண்டு, 20 . . . . . . . . . . . . . . . ஆந் திகதி மரணித்தவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இனையுடைய . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . திரு / திருமதி / செல்வியின் பூதவுடல், 20 . . . . . . . . . . . ஆந் திகதி, முற்பகல் /பிற்பகல்* . . . . . . . . . இற்கு, . . . . . . . . . . . . . . . . . . . . . . . தகனச்சாலையில் தகனம் செய்வதற்கு பொறுப்பேற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

02. இந்த சடலத்தின் தகனக் கட்டணமாக ரூபா. . . . . . . . . . . வினை அறவிட்டு 20 . . . . . . . . ஆந் திகதி இலக்கம் . . . . . . . இனையுடைய பெறுகை சீட்டு வழங்கப்பட்டு, தகனம் செய்வதற்கு பொறுப்பேற்ற சடலம் தொடர்பான ஆவணத்தின் தொடரிலக்கம் . . . . . . இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

03. இந்த அனுமதிப்பத்திரத்தில் மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரியினால் கொண்டு வரப்படும் சடலம், மேற்படி முதற் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் உரிய நேரத்தில் தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும். மேலும், இந்த அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலின் படி தங்களால் பராமரித்து வரும், தகனம் செய்யப்பட்ட பூதவுடல் தொடர்பான பதிவேட்டில் குறித்துக் கொள்ளவும்.

04. சடலத்தை தகனம் செய்த பின்னர் அஸ்தியின் எச்சங்கள் விண்ணப்பதாரியினால் கோரப்பட்டுள்ளது. / கோரப்படவில்லை. *

QR Code

திகதி: 20 . . . . . . . . . . . .                . . . . . . . . . . . . . . . . . . . . . .

முன்னரங்க அலுவலக உத்தியோகத்தர்
மாநகர ஆணையாளர் / தலைவருக்குப் பதிலாக

***தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்.**                (உத்தியோகபூர்வ பதவி முத்திரையிடவும்)

பிரதிகள்:- விண்ணப்பதாரிக்கு - சடலத்தை தகனம் செய்வதற்காக கொண்டு வரும் போது இந்த அனுமதிப் பத்திரத்தை எடுத்துவரல் வேண்டும். அவ்வாறே அஸ்தியின் எச்சங்களை கோரியிருந்தால், தகனம் செய்யப்பட்ட நாள் முதல் ஏழு நாட்களினுள் இந்த அனுமதிப்பத்திரத்துடன் வருகை தந்து அவற்றை கொண்டு செல்லல் வேண்டும்.

**சடலமொன்றினை தகனம் செய்வதற்காக பொறுப்பேற்கும் போது சபையினால் பின்பற்றப்படும் ஒழுங்குகள் மற்றும் சடலத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் / அல்லது உறவினர்களால் பின்பற்றப்பட வேண்டிய**

**<u>விதிகள் மற்றும் நிபந்தனைகள்</u>**

1. இந்த நேரத்தில் நீங்கள் சந்தித்துள்ள சோகமான சூழ்நிலை குறித்து முதலில் சபையின் அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
2. இந்த நேரத்தில் நீங்கள் அடைந்துள்ள குழப்பநிலையிலிருந்து விடுபட்டு, அமைதியான மன நிலையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்துபுரிந்து கொள்ளுமாறு. . . . . . . . . . . . . . . . . . . . . சபை உங்களிம் வேண்டி நிற்கின்றது.
3. ஏதேனுமொரு சூழ்நிலை காரணமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்பட்டால், சபையின் முன்னரங்க அலுவலக அதிகாரியையோ அல்லது அச்சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் நீங்கள் தொடர்பு கொள்ளும் அதிகாரியையோ தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.
4. (அ) இறந்தவரின் மரணம் இயற்கையானது அல்லது சாதாரண மரணமாக இறப்புச் சான்றிதழில் பதிவு செய்யப்பட்டால் மட்டுமே சபையின் தகனச்சாலையில் உடலை தகனம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

   (ஆ) எவரேனும் ஒரு நபரின் மரணம் திடீர் விபத்தினால் அல்லது தண்டனைச் சட்டத்தின் கோவையின் பொருள்கோடலிற்கு ஏற்ப அந்த நபர் தரணத்திற்கு உட்படுத்தப்பட்டிருப்பாராயின் அல்லது மரணத்திற்கான காரணம் தெளிவாகத் தெரியாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அல்லது அந்த மரணம் தொடர்பாக நீதவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியினால் நடத்தப்பட்ட பிரேதப் பரிசோதனையின் பின்னர் வழங்கப்படும் தீர்மான அறிக்கை, அந்த நபரின் சடலத்தை தகனம் செய்து தொடர்பில் ஏற்புடையதாகும்.

   (இ) அந்த வகையில் திடீர் மரணம் அடைந்து இறந்தவரின் பிரேதப் பரிசோதனைத் தீர்ப்பில், அந்த உடலை தகனம் செய்ய அனுமதித்திருந்தால் மாத்திரம் திடீர் மரணம் அடைந்தவரின் உடலை தகனம் செய்ய அனுமதிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். இது குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை, தண்டனைச் சட்டக் கோவை மற்றும் சாட்சியக் கட்டளைச் சட்டத் தேவையை நிறைவேற்றுவதாக அமைகின்றது என்பதை தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

(ஈ) மேலும், அந்த மரணச் சான்றிதழின் 7வது நிரலில் " இறப்பிற்கான காரணம் மற்றும் புதைக்கப்பட்ட அல்லது தகனம் செய்யப்பட்ட இடம்" எனக் குறிப்பிடப்பட்ட குறிப்பின் மூலம் , மரணத்திற்கான காரணத்தை உங்களுக்கு கண்டறிந்து கொள்ள முடியும்.

(உ) அவ்வாறே அந்த நிரலில் குறித்த மரணித்தவரின் உடலை அடக்கம் அல்லது தகனம் செய்யப்பட்டுள்ள இடம் என்று, "............................................................ சபையின் தகனச்சாலை" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அல்லாமல் மற்றொரு இடத்தில் அந்த உடலை அடக்கம் அல்லது தகனம் செய்ய முடியாது, அவ்வாறு செய்தல் அது சட்ட விரோதச் செயலாக அமையும் என தயவுடன் கவனத்திற் கொள்ளவும். மரணச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் அல்லாத மற்றொரு இடத்தில் பூதவுடலை தகனம் செய்வதாயின், மரணச் சான்றிதழின் 7 ஆம் வரியில் குறித்த மரணத்தைப் பதிவு செய்யும் செயலாளரினால் உரிய வகையில் திருத்தியமைத்து இருத்தல் வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

(ஊ) இது குறித்து சபை உத்தியோகத்தர்கள் தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் எளிதாக, மரணித்தவரின் மரணச் சான்றிதழின் மூலப் பிரதியுடன் நிழற் பிரதியொன்றினையும் சமர்ப்பிக்கவும். இறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை துல்லியமாக சரிபார்த்த பின்னர் அதனை உங்களுக்கு திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

(எ) இங்கு மரணச் சான்றிதழ் என்பதால் குறிப்பிடப்படுவது, மரணத்தைப் பதிவு செய்யும் செயலாளரினால் வழங்கப்பட்ட மரணச் சான்றிதழ் என்பதை கவனத்திற் கொள்ளவும். திடீர் மரணமொன்றாயின் திடீர் பிரேதப் பரிசோதகரால் அல்லது வீட்டில் இடம்பெற்ற இயல்பான அல்லது இயற்கையான மரணமாயின் பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டுள்ள "மரண அறிவித்தல் சான்றிதழ்" மரணச் சான்றிதழாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை கருத்திற் கொள்ளவும்.

(ஏ) இது தொடர்பிலான மேலதிக விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

i. இங்கு "இறப்புச் சான்றிதழ்" என்பதனால் நாடப்படுவது, இறப்புப் பதிவாளரால் வழங்கப்பட்ட மரணச் சான்றிதழைக் குறிக்கிறது.

ii. பின்வரும் ஆவணங்கள் எதுவும் மரணச் சான்றிதழாக ஏற்றுக்கொள்ளப்படாது.

* மருத்துவமனையில் மரணம் ஏற்பட்டால், மருத்துவமனையின் மருத்துவ அதிகாரியால் வழங்கப்படும் மரண அறிவிப்பு சான்றிதழ். (மருத்துவமனையில் மரணம் ஏற்பட்டால், உடலினை உரிமையாளர்களுக்கு விடுவித்து வழங்குவதற்கான அனுமதிப் பத்திரம் இதற்கு போதுமானதாக இல்லை.)
* ஒரு வீட்டில் ஏற்படும் ஏதேனுமொரு இயற்கையான மரணத்தின் போது, சம்பந்தப்பட்ட பிரிவின் கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட மரண அறிவிப்புச் சான்றிதழ்.
* ஏதேனுமொரு திடீர் மரணத்தின் போது, திடீர் பிரேதப் பரிசோதகரால் வழங்கப்படும் மரண அறிவிப்புச் சான்றிதழ் (இங்கு திடீர் மரண விசாரணை அதிகாரி அல்லது நீதவானினால் திறந்த முடிவொன்றினை அறிவித்திருப்பின் அவ்வாறான மரணங்கள் தகனத்திற்காக பொறுப்பேற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

iii. இலங்கையின் எல்லைக்கு வெளியே ஏதேனும் மரணம் நிகழும் பட்சத்தில், அந்த மரணம் நிகழ்ந்த நாட்டின் குறிப்பிட்ட அதிகாரமிக்க அதிகாரியினால் வழங்கப்பட்ட மரணச் சான்றிதழ் (சம்பந்தப்பட்ட சான்றிதழ் ஆங்கிலம் அல்லாத வேறு மொழியில் எழுதப்பட்டிருந்தால், அந்தச் சான்றிதழானது ஆங்கிலம் அல்லது சிங்களம் அல்லது தமிழ் ஆகிய ஒரு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டதன் பின்னர்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

iv. சடலத்தை தகனம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தகனச்சாலையில் தகனம் மேற்கொள்ளப்படும் என மரணச் சான்றிதழில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். (வெளிநாட்டில் ஏற்பட்ட மரணமாயின் இது ஏற்புடையதற்றது)

v. திடீர் மரணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட , பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு, உடலை அடக்கம் செய்ய உத்தரவிடப்பட்ட நிலையில், அந்த உடலை தகனம் செய்ய பொறுப்பேற்க மறுக்கப்படும்.

(ஐ) இது தொடர்பில் சபைக்கு தாங்கள் அளித்த ஒத்துழைப்பையும் ஆதரவினையும் பெருமிதத்துடன் பாராட்டுகிறேன் என்பதை தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

5. சடலத்தை தகனம் செய்த பிறகு அஸ்தியின் எச்சங்களை நீங்கள் பெற விரும்பினால், உடலை தகனம் செய்ய ஒப்படைக்கும் நேரத்தில், அந்த அஸ்தியினை இடுவதற்குப் பொருத்தமான பாத்திரத்தை நீங்கள் தகனச்சாலைப் பொறுப்பாளரிடம் வழங்க வேண்டும்.

6. சடலமமொன்றினை தகனம் செய்த தினத்திற்கு பின் அத்தினம் தொடக்கம் மூன்று (03) நாட்கள் கழிவதற்கு முன்னர் அந்த அஸ்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏதேனும் காரணத்திற்காக நியமிக்கப்பட்ட திகதிக்குள் அஸ்தியை எடுத்துச் செல்லத் தவறினால் அல்லது குறித்த அஸ்தியின் எச்சங்களை இடுவதற்குப் பொருத்தமான பாத்திரத்தை வழங்காத சந்தர்ப்பங்களில், அவற்றினை சபையினால் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு, அது குறித்து சபையினால் எந்தவொரு பொறுப்பினையும் ஏற்காது என்பதனையும் தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

7. ஏதேனும் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களினால் ( தகனச்சாலை செயலிழத்தல் அல்லது மின்சாரம் துண்டிக்கப்படல் அல்லது பிற தவிர்க்க முடியாத காரணங்களினால்) உடலை தகனம் செய்வதற்கு முடியாது போல், அந்த சடலத்திற்கு, மேலதிக செலவுகளை சபையினால் ஏற்று மற்றொரு தகனச்சாலைக்கு தகனம் செய்வதற்கு அல்லது அதற்கு வாய்ப்பில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் அல்லது உறவினர்களின் விருப்பத்தின் படி தகனச்சாலை அமைந்துள்ள இடத்திலே சபையின் செலவில் மரணித்தவரினதும் உறவினர்களினதும் கண்ணியத்தைப் பாதிக்காத வகையில் அடக்கம் செய்வதற்கு முடியுமான அளவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை கவனத்திற் கொள்ளவும். அல்லது வேறு ஏதேனும் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு அது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உங்களுக்கு அல்லது இறந்தவரின் உறவினர்கள் அல்லது வாரிசுகளுக்கு எந்தவொரு இழப்பீட்டுத் தொகையோ அல்லது நட்டத்தையோ செலுத்துவதற்கு சபையானது கட்டுப்படவில்லை. ஆனால், சடலமொன்றினை தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணத்தில் இருந்து, அவ்வுடலை அடக்கம் செய்வதற்கான செலவைக் கழித்த பிறகு ஏதேனுமொரு தொகை உபரியாக இருந்தால், அதனை திருப்பிச் செலுத்துவதற்கு கவனம் செலுத்தப்படும்.

8. ஏதேனும் தவிர்க்க முடியாத காரணத்தால் பூதவுடலை தகனம் செய்வதில் தாமதம் ஏற்பட்டால், அது தொடர்பில் எந்த இழப்பீடும் அல்லது தாமதக் கட்டணமும் செலுத்துவதற்கு சபை பொறுபேற்காது என்பதனை கருத்திற் கொள்ளவும்.

9. சடலத்தை தகனம் செய்வதற்கு எடுத்து வரும் போது மற்றும் அஸ்தியின் எச்சங்களைக் கோரியிருப்பின் அவற்றினை பெற்றுக்கொள்ள வரும் போதும் சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எடுத்துவருதல் வேண்டும். தகனம் செய்யப்பட்ட தினம் முதல் ஏழு நாட்களினுள் அஸ்தியின் எச்சங்களை எடுத்து போகாதவிடத்து, அவற்றை புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. தங்களால் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்பமிட்டு வழங்கும் போது, மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் நிபந்தனைகளை தங்களால், இறந்தவரின் உறவினர்கள் வாரிசுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதப்படும்.

## . . . . . . . . . . . . . . . . சபையின். . . . . . . . . . . . . . . . தகனச்சாலை

## தகனத்திற்காக பொறுப்பேற்ற சடலங்கள் பற்றிய பதிவேடு

| # | தகனம் செய்யப்பட்ட | | மரணித்தவரின் | | | மரணச் சான்றிதழ் | | விண்ணப்பதாரியின் | | அறவிடப்பட்ட கட்டணம் | செயற்பாடு இடம்பெற்றதா? |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திகதி | நேரம் | பெயர் | தே. அ. அ. இலக்கம் | பெண்/ ஆண் பால்நிலை | இலக்கம் | திகதி | பெயர் | தே. அ. அ. இலக்கம் | | |
| 1 | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | | |
| 13 | | | | | | | | | | | |
| 14 | | | | | | | | | | | |
| 15 | | | | | | | | | | | |
| 16 | | | | | | | | | | | |
| 17 | | | | | | | | | | | |
| 18 | | | | | | | | | | | |
| 19 | | | | | | | | | | | |
| 20 | | | | | | | | | | | |